போரதீவுப் பற்று பிரதேச சபை
மட்டக்களப்பு

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் போரதீவுப் பற்று பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ | இரண்டு வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பியமைக்கான ரூபா 55,340 தொகைக்காக இறுதிக்கணக்கறிக்கையில் (செலவு கடன்கொடுத்தோர்) எதுவித ஏற்பாடுகளும் செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். | இது தவறுதலாக ஏற்பட்ட சம்பவமாகும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆதனங்களை கைமாற்றல், சீதனம் மற்றும் நன்கொடைகள் மீது அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வையானது ரூபா 15,751,747 தொகையாக | அட்டுறு எண்ணக்கருவிற்கமைய நிலுவை முத்திரை தீர்வை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். | இத்தொகையானது முற்றாக கிடைக்கப்பெறுவதில்லை. அதனால் சபைக்கு உண்மையான தொகையினைக் கணிப்பிட முடியாத காரணத்தினாலே கணக்குகளில் நிலுவையாக காண்பிக்க முடியாமல் போய்விட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | கணிக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்களில் நிலுவை முத்திரை தீர்வையாக மீளாய்வாண்டில் ரூபா 12,344,173 தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டில் 2017 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வையானது ரூபா 3,498,964 தொகையில் கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கென அறவிடப்பட்ட 1% சதவீதமான ரூபா 34,990 தொகை, மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் அமைந்துள்ள மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய ரூபா 69,500 தொகை என்பவை செலுத்தப்பட்டதாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் மொத்தமாக கிடைத்த வருமானம் காட்டப்பட்டு அதில் செலுத்திய செலவு செலுத்தியதாக காட்டப்பட்டிருத்தல் வேண்டும். | 2017ஆம் ஆண்டிற்கான முத்திரைத் தீர்வையானது கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கென அறவிடப்பட்ட 1 சதவீதமான மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் அமைந்துள்ள மாவட்ட உதவிக் காணிப்பதிவாளர் நாயகத்திற்கு கிழக்கு மாகாண உள்;ராட்சி ஆணையாளரினால் நேரடியாகச் செலுத்தப்படுவதனால் எமது கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. |

1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செலவுக்கடன் வழங்குனரில் காட்டுவதாயின் அது ஒரு வருட காலப்பகுதியில் சீராக்கம் செய்யப்படுதல் | செலவுக்கடன் வழங்குனரில் காட்டுவதாயின் அது ஒரு வருட காலப்பகுதியில் | செலவுக்கடன் வழங்குனர் கணக்குகளில் 2013 மற்றும் 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 143,847.00 தொகையானது ஆரம்ப மீதியாகிய தொகை ரூபா |

| | | |
|---|---|---|
| வேண்டும். ஆனால் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 143,847 தொகை செலவுக்கடன் வழங்குனரில் காணப்படுவதை இதுவரை காலமும் சீர்செய்யப்படாது 6 வருடங்களுக்கு மேலாக செலவுக் கடன் வழங்குனரில் காட்டப்பட்டு வருகின்றது | சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும். | 81,397.26 இனங்காணப்படாது காணப்படுவதுடன் சுரவணையடியூற்று பொதுக்கிணறு அபிவிருத்தி செய்வதற்கான தொகை ரூபா 62,450.62 இவ்வேலை முடிவுறாத காரணத்தினால் கொடுக்கப்படவில்லை. இத்தொகையினை இவ்வருடம் வருமானத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 ஆம் ஆண்டு அரச பெறுகை வழிகாட்டி | | | |
| 2018 யூலை 09 ஆம்திகதி வெளியிடப்பட்ட 34 ஆவது பிற்சேர்க்கையின் 2.14.1 | ரூபா 200,000 தொகைக்கு மேற்பட்ட வாகன திருத்தச் செலவு தொடர்பான முன் அனுமதியினை அமைச்சின் செயலாளரிடமிருந்து பெறவேண்டியிருந்த போதிலும் இதற்கு மாறாக சபையினால் GZ 3838 இலக்க வாகன திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | சபையின் தீர்மானத்துடன் உரிய முன்னனுமதியினைப் பெற்று திருத்தம் செய்திருத்தல் வேண்டும். | எமது சபை நிதியை செலவிடும் போது சபையின் தீர்மானத்துடன் செலவிடலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் வேறு நிதி மூலங்களுக்கு அமைச்சின் செயலாளரின் அனுமதி பெற வேண்டும். (பிரதி இணைக்கப்பட்டுள்ளது - இணைப்பு-4) |
| ஆ) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிர்வாக சுற்றறிக்கை | மேலதிக நேரத்திற்காக செலுத்தப்படும் படிகளின் விடயத்தில் நேரத்தை விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் | மேலதிக நேரக் கொடுப்பனவுகள் செய்யப்படும் போது அந்நேரத்தை விரலடையாளப் பதிவின் மூலம் உறுதிப்படுத்தியே கொடுப்பனவு | எமது சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் விசேட கடமையின் நிமித்தம் மண்டூர் முருகன் கோவிலில் கடமையாற்றியதற்கும் மற்றும் விரலடையாள |

| | | | |
|---|---|---|---|
| 09/2009 இன் IV ஆம் பிரிவு | வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும், விரலடையாளப் பதிவு செய்யப்படாமல் 24 ஊழியர்களுக்கு மேலதிக நேரப்படியாக வழங்கப்பட்டிருந்தது. | செய்திருத்தல் வேண்டும். | இயந்திரம் அலுவலகத்திற்குள் பொருத்தப்பட்டிருந்ததால் சனி, ஞாயிறு தினங்களில் கடமையாற்றும் நீர் விநியோகத்தொழிலாளிகள் விரலடையாளத்தை இடவில்லை. தற்போது இவ் இயந்திரம் வெளியில் பொருத்தப்பட்டு விரலடையாளம் இடப்படுகின்றது. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 30/2016 இலக்க சுற்றறிக்கை 3.1 பந்தி | சகல எரிபொருள் பரீட்சிப்பின் பின்னர் 12 மாத கால அளவின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூர அளவினை ஓடியதன் பின்னர் அல்லது பூரணமான எஞ்சின் திருத்தத்தின் பின்னர் போன்ற காரணங்களில் முதலில் அமையும் சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருளினை பரீட்சித்து பார்க்க வேண்டி இருந்த போதிலும் அப் பரீட்சிப்பு இடம் பெறவில்லை. | மீளாய்வாண்டிற்கு எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். | தற்போது எரிபொருள் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

2. நிதிசார் மீளாய்வு
---------------------------

2.1 நிதிசார் விளைவுகள்
--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 78,699 ஆக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,356,779 தொகையாக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 4,435,478 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட பொழிப்பில் வீதவரிகள் தொடர்பில் ரூபா 1,100,000 தொகை வருமானமாக பெறமுடியும் என காட்டப்பட்டிருந்தும் மற்றும், சபையினால் வீதவரி அறவிடுவது என 2018 ஏப்ரல் 18 ஆம் திகதிய 2 ஆவது அமர்வின் 04/02 இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தும் அத்தொகையினை மீளாய்வாண்டில் அறவிட எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் சபைக்கு இத்தொகை வருமான இழப்பாகும். | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 134(1) பிரிவிற்கமைய வீதவரி அறவிடப்பட்டிருத்தல் வேண்டும். | சோலைவரி சேகரிப்பதற்கான விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விபரங்கள் சேகரிக்கப்பட்டதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 15 செயற்பாடுகளில் | சபையின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு செயற்பாடுகள் செயற்படுத்தப் | 2018ம் ஆண்டு வருடாந்த செயற்றிட்டத்தில் 15 செயற்பாட்டுசெயற்றிட்டங்களை செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதும் 6 செயற்பாடுகள் மாத்திரமே எம்மால் நிறைவேற்றப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| 6 செயற்பாடுகளுக்கு மாத்திரம் மீளாய்வாண்டில் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது ஏனைய செயற்பாடுகள் சபையின் பரிந்துரைக்கமைய, மாற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் மக்களுக்கு தேவையென அடையாளப்படுத்தப்பட்டு முன்மொழியப்பட்ட 9 செயற்திட்டங்கள் செயற்படுத்த முடியாதிருந்தது. | பட்டிருக்க வேண்டும். | எனினும் ஏனைய 9 செயற்பாடுகளுக்குமான நிதியானது போதாமையின் காரணமாக எம்மால் நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது. |

(ஆ) செயற்பாடுகளின் செயற்பாடுகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (I) பொதுநூலகக் கட்டிடம் | | |
| தயட்ட கிருள தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் ரூபா 7,232,236 தொகை மதிப்பீட்டில் சபையின் எல்லைக்குட்பட்ட சின்னவத்தைக் கிராமத்தில் பொது நூலக மாடிக்கட்டிடம் 2013 மே 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தும் சபையின் வினைத்திறனற்ற செயற்பாடு காரணமாக ரூபா 1,935,449 தொகைக்கான வேலை மாத்திரமே முடிக்கப்பட்டிருந்ததுடன் கடந்த மற்றும் மீளாய்வாண்டில் பல்வேறுபட்ட நிதி முலம் மொத்தமாக ரூபா 1,021,476 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் இவ் நூலகக் கட்டிடத்தினை பூர்த்தி செய்து மக்களின் | இக்கட்டிடத்தினை பூர்த்தி செய்யாததனால் குறித்த கிராம மக்கள் நூலக வசதியினை பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளது. | தயட்ட கிருள வேலைத்திட்டத்தின் கீழ் 2013ஆம் ஆண்டில் ரூபா8000000.00 மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட தயட்ட கிருள வேலைத்திட்டம் இடைநடுவில் முடிவுறுத்தப்பட்ட காரணத்தினால் ரூபா 1,900,000.00 வேலை மாத்திரமே நடைபெற்றது. சின்னவத்தை பொது நூலக கட்டிடம் பூர்த்தியடையாத நிலையில் காணப்பட்டதனால் அதனைத் தொடர்ந்து மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மானியம்இ பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை சபை நிதி மூலம் குறிப்பிட்டளவு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளது. இருந்த போதிலும் நூலக கட்டிட வேலி மட்டுமே செய்யப்படாமல் உள்ளது. இவ்வேலை மிக விரைவில் பூர்த்தி செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் திறந்து மக்கள் பாவனைக்கு விடப்படும். |

| | | |
|---|---|---|
| பாவனைக்கு வழங்காமல் 06 வருடங்களாக விளைவற்றுக்காணப்படுகின்றது. | | |
| (II) வலுவூட்டல் வேலைத்திட்டம்.<br>--------------------------------------<br>வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களுக்கான வேலைகள் முடிவுற்றதாக அறிக்கை சமர்ப்பித்து 2017 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட தொகையில் ரூபா 1,802,664 தொகைக்கான வேலைத்திட்டங்கள் 2018 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த வேலைகள் நிறைவேற்றப்படாததால் மக்களுக்குரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் பூர்த்தியாக்கப்படாத வேலைத்திட்டங்களில் களுமுந்தன்வெளி, பலாச்சோலை, சுரவணையடியூற்று போன்ற கிராமங்களில் வேலைத்திட்டங்கள் இவ்வருடம் முடிவுற்று ரூபா 750,000.00 பெறுமதியான வேலைகள் இன்னும் ஓரிரு மாதங்களில் முடிவுறுத்தப்படும். |

(இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்
--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவு முகாமைத்தும் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால மற்றும் குறுங்கால செயற்திட்டங்களுக்கென கடந்த மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 2,169,564 தொகை செலவினம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், திண்மக்கழிவு முகாமை செய்யும் நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்தபுரம் சேகரிப்பு நிலையம் தற்போது எதுவித பயன்பாடும் இன்றி காணப்படுவதுடன் சேதன பசளை உற்பத்தி மற்றும் மிள்சுழற்சி விற்பனை போன்ற திட்டங்களை செயற்படுத்தி வருமானம் உழைக்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் மூலம் சேதன பசளை உற்பத்தி மற்றும் மீள்சுழற்சி விற்பனை போன்ற திட்டங்களின் மூலம் வருமானம் உழைத்திருக்கலாம். | திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் விவேகானந்த புரத்தில் அமைக்கப்பட்ட சேகரிப்பு நிலையத்திற்கான சேதனைப்பசளை தயாரிப்பதற்கான இயந்திர உபகரணம் இன்மையால் மத்திய அரசாங்க சூழல் சுற்றாடல் அதிகார சபையிடம் இது தொடர்பாக திட்ட அறிக்கை (Proposal) சமர்ப்பித்துள்ளோம். அவர்கள் வழங்குவதாக உறுதி அளித்துள்ளார்கள். இதற்கான உபகரணங்கள் கிடைக்கப் பெற்றதும் இத்திட்டம் பூரணமாக செயற்படுத்தப்படும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணிகட்டிடங்கள் ரூபா 2,100,000 தளபாடங்கள் ரூபா 233,600 நூல் நிலையப் புத்தகங்கள் ரூபா 192,001 போன்ற தொகைகள் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | பதிவழிக்கப்படுவதற்காக பலமுறை உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டும் இதுவரை அனுமதி கிடைக்கப்பெறவில்லை. இது தொடர்பாக மீண்டும் பதிவழிப்பதற்கு(Write off) அனுமதி பெறுவதற்கு உரிய திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும். |

3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணிகள் விற்பனை மீது 1 சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் மொத்த பெறுமதி ரூபா 115,785,249 தொகையில் வரியாக ரூபா 1,157,852 தொகையை அறவிட சபை நடவடிக்கையெடுத்திருக்கவில்லை | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், காணி விற்பனை மீதான வரியை அறவிட நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% வரியானது எதிர்வரும் காலங்களில் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3.4 பெறுகை

3.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமானது பிரதேச சபையினால் | பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல் | எமது சபையினால் எதிர்வருங்காலங்களில் |

| | | |
|---|---|---|
| வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், சபையினால் ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும்.. | பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திரட்டிய வீதவரிகள் ரூபா 1,100,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் எதுவிதமான அறவீடுகளும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 134(1) பிரிவிற்கமைய வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | திரட்டிய வீத வரிகள் தொடர்பாக தரவு சேகரிப்பு பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதனால் இவ்வாண்டு அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.. | இனிவரும் காலங்களில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படும |

4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டம் நடைபெற்றிருத்தல் வேண்டும். | சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் கூட்டங்கள் குறைவாகவே நடைபெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் |

கூட்டங்கள் சிறப்பாக நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
---------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் வருமான முகாமைத்துவம், பாதீட்டு கட்டுப்பாடு, நிலையான சொத்துக் கட்டுப்பாடு போன்ற செயற்பாடுகள் இனிவரும் காலங்களில் ஏற்கனவே செய்ததைவிட மிகச்சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட ஏனைய குறைபாடுகளும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால மற்றும் உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். | |
| (இ)நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (I) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br>(ii) சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |